திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர் –மருத்துவர்.ஆல்பி ஜான் வர்கீஸ். இ.ஆ.ப.,
திருவள்ளுவர் ஆண்டு/ 2053/சோபகிருது வருடம்/ ஆனி மாதம்–08

ந.க.எண்.1068/2023/ அ2 நாள்.23–06–2023

பொருள்: பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – திருவள்ளூர் மண்டலம் – திருவள்ளூர் மாவட்டம் – பேரூராட்சிகளில் பணிபுரிந்து வரும் அரசு நிலையாக்கப்படாத பணியிடங்களில் உள்ள நுழைவு பணியிடங்களான (Enter Level Post) மூலம் அரசாணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கடித நாள்.31.05.2019ன்படி வரித்தண்டலராக பணிநியமனம் செய்யப்பட்டு --பொதட்டூர்பேட்டை பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிபுரிந்து வரும் ஜெயசங்கர் (திரு) என். என்பவருக்கு பணி நியமன நாளான 02.06.2001 முதல் பணி வரன்முறை செய்து ஆணை பிறப்பித்தல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண்.125, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.27.05.1999
2. அரசாணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.05.2019
3. பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–28 அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.984/2013/அ3 நாள்.28.11.2019
4. பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–28 அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.984/2013/அ3 நாள்.23.08.2021
5. அரசு கடித எண்.360/(பேரூ1)/2023–3 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை, நாள்.08.03.2023
6. பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை – 28 கடிதம் ந.க.எண்.14709/2021, நாள்.10.05.2023
7. செயல் அலுவலர், (பொ) பொதட்டூர்பேட்டை பேரூராட்சி அவர்களின் கடிதம் ந.க.எண்.270/2022/அ1, நாள்.26.05.2023

*********

ஆணை –

பார்வை –1இல் காணும் அரசாணை (நிலை) எண்.125, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.3) துறை, நாள்.27.05.1999–இன்படி பேரூராட்சிகளில் அரசு நிலையாக்கப்படாத பணியிடங்களான பதிவறை எழுத்தர், துப்புரவு பணி மேற்பார்வையாளர், அலுவலக உதவியாளர், இரவு காவலர் ஆகிய பணியிடங்களில் தொகுப்பூதியத்தில் பணியமர்த்தப்பட்ட பணியாளர்களை அவர்கள் பெற்றுள்ள கல்வி தகுதியின் அடிப்படையில் அரசு நிலையாக்கப்பட்ட பணியிடங்களில் உள்ள நுழைவுப் பணியிடங்களான (Entry Level Post) இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் ஆகிய பணியிடங்களில் முறையாக நியமனம் செய்யப்பட்டு பணி ஏற்கும் நாளிலிருந்து பணப்பயன்கள் வழங்கிடவும், மேலும், கீழ்நிலைப் பணியிடத்திலிருந்து இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பதவிகளில் ஈர்த்துக்கொள்ள இதனை ஒரு சிறப்பினமாக ஒரு முறை மட்டுமாக (One Time Consideration) கருதி, இனி வரும்

காலங்களில் இவ்வாறான பணி ஈர்ப்பினை தவிர்க்குமாறு தனது இசைவினை தெரிவித்து பார்வை–2ல் காணும் அரசாணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.3) துறை. நாள்.31.05.2019இன் படி ஆணையிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், திருவள்ளூர் மண்டலம், திருவள்ளூர் மாவட்டம், கீழ்கண்ட பேரூராட்சிகளில் பணிபுரிந்து வரும் அரசு நிலையாக்கப்படாத பணியிடங்களில் உள்ள நுழைவு பணியிடங்களான (Entry Level Post) இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் ஆகிய பணியிடங்களில் பார்வை 3–இல் காணும் பேரூராட்சிகளின் இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி, கீழ்காணும் விவரப்படியான பேரூராட்சிகளில் இளநிலை உதவியாளர் மற்றும் வரித்தண்டலராக பதவி உயர்வு அளித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | பேரூராட்சியின் பெயர் | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1 | என்.ஜெயசங்கர், வரித்தண்டலர் | பொதட்டூர்பேட்டை | 30.11.2019 |

அரசாணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.3) துறை நாள்.31.05.2019ன்படி இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர்களாக பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு பார்வை 5–இல் காணும் அரசு கடிதத்தில் கீழ்கண்டவாறு தெளிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதாக பார்வை 6இல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(1) அரசாணை (நிலை) எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 31.05.2019–இன் படி இளநிலை உதவியாளர் /வரித்தண்டலராக பணிபுரிந்து வருபவர்களின் பணியினை 02.06.2001–ல் உரிய நியமன அலுவலரால் (Appointing (Authority) வரன்முறைப்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பார்வை--4ல் காணும் பேரூராட்சிகளின் இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.984/2013/அ3, நாள். 23.08.2021–இன் படியும் மற்றும் பார்வை–2ல் காணும் அரசாணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.05.2019 எதிராக தொடரப்பட்ட WP.No.17989/2019. WP.No.23426/2019, WP.No.21574/2019 மற்றும் WP.No.27597/2019 ஆகிய வழக்குகளில் வழங்கப்படும் தீர்ப்புகளுக்கு உட்பட்டதாகும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியர்களின் பணியினை வரன்முறை செய்யலாம் என அரசு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அரசு கடித எண்.360/(பேரூ1)/2023–3 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை, நாள்.08.03.2023)

எனவே, பொதட்டூர்பேட்டை பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிபுரிந்து வரும் திரு.என்.ஜெயசங்கர் என்பவருக்கு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கிடுமாறு பார்வை 7இல் காணும் கடிதத்தின்படி பொதட்டூர்பேட்டை பேரூராட்சி (பொறுப்பு) செயல் அலுவலரால் பரிந்துரை செய்து கருத்துரு வரப்பெற்றுள்ளது. மேலும், தனியருக்கு 53 வயது பூர்த்தி அடையாததால் இவர் பவானி சாகர் பயிற்சிக்கு செல்ல வேண்டியுள்ளது.

மேற்படி செயல் அலுவலரால் பெறப்பட்டுள்ள கருத்துரு மற்றும் தனியரது பணிப்பதிவேட்டினை பரிசீலனை செய்யப்பட்டதில், மேற்காணும் வரித்தண்டலர் தனது பணிக்காலத்தில் தண்டனை பணிக்காலம், வரன்முறைப்படுத்தப்படாத பணிக்காலம் ஏதும் இல்லாததால், தனியரது பணியினை கருத்தியலாக (Notionally) 02.06.2001 முதல் பணி நியமனம் செய்யப்பட்டதாக கருதி முன்தேதியிட்டு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

<u>நிபந்தனை</u>

1. அரசாணை (நிலை) 76. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.3105.2019ன்படி பணி நியமனம் செய்யப்பட்ட மேற்படி பணியாளரின் பணியினை கருத்தியலாக (Notionally) ஈர்த்துக்கொள்ளப்பட்ட நாளான 02.05.2001 முதல் பணியினை மேற்படி அரசாணைக்கு எதிராக தொடரப்பட்ட W.P.No.17989/2019, W.P.No.23426/2019. W.P.No.21574/2019 மற்றும் W.P.No.27597/2019 ஆகிய வழக்குகளில் வழங்கப்படும் தீர்ப்புகளுக்கு உட்பட்டது என்ற நிபந்தனையுடன் தனியரின் பணியினை வரன்முறை செய்யப்படுகிறது.
2. மேற்படி வழக்கில் தனியர்களுக்கு எதிராக தீர்ப்புரை வரும் பட்சத்தில் இவ்வாணை முற்றிலும் இரத்து செய்யப்பட்டதாக கருதப்படும்.
3. இவ்வழக்கில் பிறப்பிக்கப்படும் இறுதி தீர்ப்பிற்கேற்ப இவ்வாணை மாறுதலுக்கு உட்பட்டது.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த நாள் | கருத்தியலாக (Notionally) பணியில் ஈர்த்துக்கொள்ளப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1 | திரு.என்.ஜெயசங்கர், வரித்தண்டலர் பொதட்டூர்பேட்டை பேரூராட்சி | 30.11.2019 | 02.06.2001 |

மேற்காணும் பேரூராட்சி செயல் அலுவலர் பணிவரன்முறை செய்யப்பட்ட ஆணையினை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதல் மற்றும் பணியாளரின் பணியினை வரன்முறை செய்த விவரத்தினை தனியரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்து அதன் நகலினை இவ்வலுவலகம் அனுப்பி வைக்குமாறு பொதட்டூர்பேட்டை முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் (பொறுப்பு அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/—ஆல்பி ஜான் வர்கீஸ்
மாவட்ட ஆட்சித் தலைவர்
திருவள்ளூர் மாவட்டம்.

பெறுநர்

1. திரு.என்.ஜெயசங்கர்,
   வரித்தண்டலர்,
   பொதட்டூர்பேட்டை முதல்நிலை பேரூராட்சி,
   திருவள்ளூர் மண்டலம்
   (செயல் அலுவலர்கள் மூலமாக)

நகல் : 1. பேரூராட்சிகளின் இயக்குநர் சென்னை–28 அவர்களுக்கு பணிதனுப்படுகிறது.
2. செயல் அலுவலர், பொதட்டூர்பேட்டை பேரூராட்சி.
3. அ2 இருப்பு கோப்பு

//உத்தரவின்படி//

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
திருவள்ளூர் மாவட்டம்.

23/6/2023

ந.க. எண்: 163/2023/அ1 நாள்: 27/06/20..

திரு. வ. ஜெய்சங்கர், [illegible] என்பவரது பணிவரன்முறை செயல்முறை ஆணை ந.க. எண்: 1068/2023/அ2 நாள்: 23/06/2023-ல் சார்வு செய்யப்படுகிறது

(ஒ/ம்)

செயல் அலுவலர்
பொதட்டூர்பேட்டை பேரூ...
திருவள்ளூர் மாவட்ட...

பெறுநர்

திரு. வ. ஜெய்சங்கர்
[illegible]
பொதட்டூர்பேட்டை பேரூராட்சி
திருவள்ளூர் மாவட்டம்

27/6/2023

Received